உ

சிவமயம்



இஃது

துன்னாலை தெற்கு

கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும்

ஹாட்லிக் கல்லூரி மாணவனும்.

ஆகிய

காலஞ்சென்ற செல்வன்

# சிவசுப்பிரமணியம் சிவரூபன்

அவர்களின்

# நினைவு ஏடு

21-7-91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி வெண்பா

ஆன பிரசா பதியிற் சித்திரை சேர் தசமி
தனில் ரூபபெனும் ரூபத்தை — ஏற்றவனாம்
சிவரூபன் தண்ணிழலான் தன்னடியை
தான் சேர்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சிவசுப்பிரமணியம் சிவரூபன்

பாவச்சுழலில்
**29.07.1974**

விமோசன விடிவில்
**23.04.1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

நீள நினைந்தடியே னுமை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை
யட்டித் தரப்பணியே.

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற் காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரிவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருந்தொண்டு பரவுமாம்.

## திருமந்திரம்

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

## பட்டினத்தார் பாடல்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவும் கற்பியுமே.

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

# திருவாசகம்

திருமுறை 8

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி!
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!
சிவன் அவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயா வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா!
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு, நல்லறிவே!
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்து(உ)ள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேர்ஆறே
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாம் அல்லையும்ஆய்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுஆகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்உணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா!மிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே! ஓஎன்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வன் சிவா. சிவரூபனின்
# 90ம் நாள் நினைவஞ்சலி

சிவரூபா,

பழக இனியவனே பண்பான நண்பா
எழுதியடங்காதே எமக்குற்ற சோகம்
சில்வண்டு போலோடித் திரிந்தாயே எம்முடனே
சிவரூபா உன்நினைவு இருதயத்தில் நிலையாச்சே
உங்களது நட்பதனைப் பெற்றுவிடத் துடித்தவர்நாம்
இங்கிரங்கி நிற்கின்றோம் இனியமுகம் காணுமல்
சேலிக்கும் பிழைபுரியாய் சிறுமை விரும்பாயே
சீலத்தவமகனே சென்றதிசை பார்க்கின்றோம்
கண்கள் பனித்திடவே கதிகலங்கி நிற்கின்றோம்
விண்சென் றடங்கமனம் கொண்டாய் திகைத்திட்டோம்
தெய்வத்தை நேசித்த அன்புநண்பா அவனடியில்
உய்யப் பிரிந்தாயோ உனக்கமைக சாந்தியங்கே.

— நண்பர்கள்

## நன்றி நவில்கின்றோம்

எமது அன்பின் உறைவிடமாயிருந்த செல்வன் சிவரூபன் சிவசுப்பிரமணியத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய, பலவழிகளில் உதவிபுரிந்த, அனுதாபச் செய்திகள் அனுப்பிய, அந்திய கால கிரு[illegible]ங்களில் கலந்து உதவிய அன்பு நெஞ்சங்களிற்கு நவில்கின்றோம் நம் நன்றி.

குடும்பத்தினர்

துன்னாலை தெற்கு.
கரவெட்டி.

தமிழ்ப்பூங்கா - நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org